ශ්‍රී ලංකා ජනරජයේ ගැසට් පත්‍රය
අති විශෙෂ
இலங்கைக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை
அதி விசேஷமானது

අංක 161/14 — 1975 මැයි 02 වැනි සිකුරාදා — 1975.05.02
161/14 ஆம் இலக்கம்—1975 ம் ஆண்டு மே மாதம் 02 ந் திகதி வெள்ளிக்கிழமை

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

# பகுதி I: தொகுதி (I)—பொது

(ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறாகக் கோவை செய்து வைப்பதற்காகத் தனித்தனிப் பக்கங்கள் தரப்பட்டுள்ளன.)

## விலைக் கட்டளைகள்

உணவு விலைக்கட்டளை இல. சீ. 561

பழுப்புச் சீனி
சுத்திகரிக்கப்பட்ட வெள்ளைச் சீனி

விலைக்கட்டுப்பாட்டுச் சட்டம்

4 ம் பிரிவின் கீழான கட்டளை

173 ம் அத்தியாயமான விலைக்கட்டுப்பாட்டுச் சட்டத்தின் 4 ம் பிரிவினால் (உணவும் நானாவிதப் பொருட்களும்) விலைக்கட்டுப்பாட்டதிகாரியான வில்பிறட் ஜயசூரிய ஆகிய எனக்கு அளிக்கப்பட்டுள்ள தத்துவங்களைக் கொண்டு இக்கட்டளையால்—

(i) 1974 ம் ஆண்டு ஒக்டோபர் மாதம் 24 134/6 இலக்க இலங்கை அரசாங்க அதிவிசேட வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்ட 1974 ம் ஆண்டு ஒக்டோபர் மாதம் 23 ம் திகதிய சீ 554 ம் இலக்க உணவு விலைக்கட்டளையை உடனடியாக ரத்துச் செய்கிறேன்.

(ii) இதனோடிருக்கும் அட்டவணையின் 2 ம், 3 ம் பத்திகளில் விபரிக்கப்பட்டிருக்கும் விலைகளையே முறையே நிகர அந்தர் ஒன்றை மொத்த வியாபாரி ஒருவர் விற்கும் ஆகக்கூடிய மொத்த விலையாகவும், நிகர இருத்தல் ஒன்றை சில்லறை வியாபாரி ஒருவர் பாவிப்பாளர் ஒருவருக்கு விற்கும் ஆகக்கூடிய சில்லறை விலையாகவும், குறித்த அட்டவணையின் நேரொத்த பதிவில் 1 ம் பத்தியில் விபரிக்கப்பட்ட பொருட்கள் இந்த விலைக்குக் கூடுதலாக இலங்கைத் தீவு எல்லைக்குள் விற்கலாகாதெனவும் உடனடியாக நடைமுறையில் வருமாறும் விதிக்கிறேன்.

(iii) இக்கட்டளையின் நோக்கத்திற்காக—

(அ) குறித்த அட்டவணையின் 1 ம் பத்தியில் விபரிக்கப்பட்ட ஒரு பொருளில் எத்தொகையாவது திருப்பி விற்பதற்காக விற்றல் அல்லது குறித்த அட்டவணையின் 1 ம் பத்தியில் விபரிக்கப்பட்ட ஒரு பொருளை ஒரு நிகர அந்தரைக் கொண்ட தொகையில் அல்லது அதிற் கூடிய தொகையில் ஒரு தடவையில் விற்றல் மொத்த விற்பனையாகவே கருதப்படுமென்றும் ;

(ஆ) குறித்த அட்டவணையின் 1 ம் பத்தியில் விபரிக்கப்பட்ட ஒரு பொருளில் ஒரு நிகர அந்தருக்குக் குறைந்த எத்தொகையையாவது பாவிப்புக்காக அல்லது உபயோகத்திற்காக விற்றல் சில்லறை விற்பனையாகவே கருதப்படுமென்றும் ஆஞ்ஞையிடுகிறேன்.

(iv) இக்கட்டளையில் ஆகக்கூடிய விலைகள் விதிக்கப்பட்டுள்ள ஒவ்வொரு இடப்பரப்பிலும், குறித்த அட்டவணையின் 1 ம் பத்தியில் விபரிக்கப்பட்ட எப்பொருளையேனும் வேறொரு பொருளோடு கலந்து விற்றலாகாது என ஆஞ்ஞையிடுகிறேன்.

(v) இக்கட்டளையால் ஆகக்கூடிய விலைகள் விதிக்கப்பட்டுள்ள ஒவ்வொரு இடப்பரப்பிலும், குறித்த அட்டவணையின் 1 ம் பத்தியில் விபரிக்கப்பட்ட எப்பொருளையேனும் தம்வசத்தில், அல்லது தமது கட்டுப்பாட்டில் எவ்விடத்திலாவது, வாகனத்திலாவது, வைத்திருக்கும் ஒவ்வொரு வியாபாரியும், அவ்விடத்தில் அல்லது அவ்வாகனத்தில், தகுந்த ஒரு கொள்கலத்தில் குறிப்பிட்ட பொருளில் சிறு தொகையையும், இக்கட்டளையால், அப்பொருளுக்கு விதிக்கப்பட்ட ஆகக்கூடிய விலைகள், ஒரு அங்குல உயரத்திற்குக் குறையாத எண்களில், விலை அட்டைகளில் அல்லது பலகைகளில் எழுதி அப்பொருளையும், ஆகக்கூடிய விலையையும் வாங்குபவரால் நன்றாகப் பார்க்கக்கூடியவாறு, அக்கொள்கலத்தில் இணைத்து பகிரங்கமாகப் பார்வைக்கு வைத்தல் வேண்டுமென ஆஞ்ஞையிடுகிறேன்.

(vi) இக்கட்டளையின் நோக்கத்திற்காக, “இருத்தல்” அல்லது “இரு” என்பது அவோர்டுபோன் எடுத்தலளவை முறையின் பிரமாண இருத்தல் நிறையாகக் கருதப்படுமென ஆஞ்ஞையிடுகிறேன்.

(vii) இக்கட்டளையால் ஆகக்கூடிய விலைகள் விதிக்கப்பட்டுள்ள ஒவ்வொரு இடப்பரப்பிலும், குறித்த அட்டவணையின் 1 ம் பத்தியில் விபரிக்கப்பட்ட பொருள் எதனையும் மொத்தமாக விற்கும் ஒவ்வொருவரும், குறித்த அட்டவணையின் 1 ம் பத்தியில் விபரிக்கப்பட்ட ஏதாவது பொருளைச் சில்லறையாக விற்கும் ஒவ்வொருவரும் அப்பொருளை வாங்குவோர் கேட்குமிடத்து அவருக்குப் பின்வருவனவற்றைக் குறிப்பிட்டு பற்றுச்சீட்டு ஒன்று கொடுத்தல் வேண்டுமென ஆஞ்ஞையிடுகிறேன் :—

(அ) விற்பனை நடந்த தேதி ;
(ஆ) விற்ற பொருளின் தொகை (நிறையில்) ;
(இ) விற்ற தொகைகளுக்குக் கொடுத்த விலை ;
(ஈ) எவ்விதமான விற்பனை, அதாவது மொத்த விற்பனையா அல்லது சில்லறை விற்பனையா ?

(viii) குறித்த அட்டவணையின் 1 ம் பத்தியில் விபரிக்கப்பட்ட ஏதாவதொரு பொருள் விற்கப்படுமிடத்து அட்டவணையின் 2 ம், 3 ம் பத்தியில் குறிப்பிட்டுள்ள ஆகக்கூடிய விலைகளில் அவ்வாறு விற்கப்படும் பொருளைச் சுற்றிக் கொடுக்கும் அல்லது வைத்துக் கொடுக்கும் கொள்கலம் ஏதாவது உபயோகிக்கப்படின், அதன் விலையும் அடங்கவேண்டுமென ஆஞ்ஞையிடுகிறேன்.

வில்பிறட் ஜயசூரிய,
விலைக் கட்டுப்பாட்டதிகாரி,
(உணவும் நானாவிதப் பொருட்களும்).

1975 ம் ஆண்டு மே மாதம் 2 ந் திகதி, மு. ப. 9.00 மணிக்கு கொழும்பில் கையொப்பமிடப்பட்டது.

அட்டவணை

| பத்தி 1<br>விபரம் | பத்தி 2<br>ஒரு நிகர அந்தருக்கு ஆகக் கூடிய மொத்த வியாபார விலை<br>ரூ. ச. | பத்தி 3<br>ஒரு நிகர இறுத்தலுக்கு ஆகக் கூடிய சில்லறை விலை<br>ரூ. ச. |
|---|---|---|
| (i) பழுப்புச் சீனி அல்லது சுத்திகரிக்கப்பட்ட வெள்ளைச் சீனி (பங்கீடு) | 78 45 | 0 72 |
| (ii) பழுப்புச் சீனி அல்லது சுத்திகரிக்கப்பட்ட வெள்ளைச் சீனி (பங்கீடில்லாமல்) | 837 81 | 7 50 |

குறிப்பு.—(1) இவ்விலைகள் மேலே சொல்லப்பட்ட பொருட்களை விற்கவேண்டுமென விதிக்கப்பட்ட விலைகளல்ல; இவை ஆகக்கூடிய விலைகளாகும். இவ்விலைகளுக்கு மேலாக இப்பொருட்களை விற்றலாகாது.

(2) பங்கீடு என்பது உணவுக் கட்டுப்பாட்டதிகாரியால் தீர்மானிக்கப்படும் பங்கீடாகும்.

5—254

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.